بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/07/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 27

### அன்னாரது காலத்தில் கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட போர்ப்படைகள் பற்றிய குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ ـ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ ـ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் யமாமா போர் பற்றி விரிவாக எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:* இன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் ஈரானியர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுத்துரைப்பேன்.

இதன் அடிப்படையில் ஒரு போர் நடைபெற்றது. அதனை **ஸாத்துஸ் ஸலாஸில் போர் அல்லது காஸிமா போர் என்று அழைப்பர்.** இந்தப் போர் முஹர்ரமுல் ஹராம் 12 ஹிஜ்ரியில் நடைபெற்றது. இந்தப் போர் ஸாத்துஸ் ஸலாஸில் போர், காஸிமா போர் மற்றும் ஹஃபீர் போர் எனும் மூன்று பெயர்களால் பிரசித்தி பெற்றுள்ளது. இந்தப் போரை ஸாத்துஸ் ஸலாஸில் போர், அதாவது, சங்கிலிகளின் போர் என்று அழைத்திட காரணம், ஈரானிய படையினர், எவரும் போரை விட்டு ஓடி விடக் கூடாது என்பதற்காக தங்களைத் தாங்களே ஒருவர் மற்றவருடன் சங்கிலிகளால் பிணைத்துக் கொண்டனர் என்பதாகும்.

முஸ்லிம்களின் படையின் எண்ணிக்கை 18,000 ஆக இருந்தது. மேலும் படை தளபதியாக ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் இருந்தார்கள். அதே நேரத்தில் ஈரானியர்கள் தரப்பிலிருந்து, குலம் கோத்திரம் மற்றும் கண்ணியத்தில் ஈரானிய தலைவர்களில் பெரும்பாலாரை விட மேலோங்கி இருந்த, அப்பகுதியின் கவர்னர் ஹுர்முஸ் தளபதியாக இருந்தான். ஈரானியர்களைப் பொறுத்தவரை அவனது கண்ணியம் உயர்வாக இருந்தது. ஆனால், ஈராக்கின் எல்லை பகுதியில் வாழ்ந்து வந்த அரேபியர்கள் இவனை வெறுத்து வந்தனர். ஏனென்றால் அவன் அவர்கள் மீது மற்ற அனைத்து எல்லைப்புற தலைவர்களை விடவும் அதிகமாக கடுமையும் அநீதியும் இழைத்து வந்தான்.

முஸ்லிம் அல்லாத அரேபியர்களின் வெறுப்பு எந்த அளவுக்கு அதிகமாக இருந்தது என்றால், அவர்கள் ஒரு மனிதரின் தீமை, தீய இயல்பு, தீய நடவடிக்கை மற்றும் நன்றி கேடைப்பற்றி எடுத்துரைக்கும் போது, ஹுர்முஸின் பெயரை உதாரணமாகக் கூறி வந்தார்கள். யமாமாவிலிருந்து புறப்படுவதற்கு முன்பாக ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் ஹுர்முஸின் பெயருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். கடிதம் கிடைத்ததும் அவன் கிஸ்ரா மன்னன் அர்த் ஷீருக்கு அது பற்றிய தகவல் கொடுத்தான். தனது படைகளை ஒன்று திரட்டி, வேகமாக செல்லும்

ஒரு படையை அழைத்துக் கொண்டு உடனடியாக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை எதிர்ப்பதற்காக காஸிமா சென்றடைந்தான்.

ஆனால், அவன் அவ்வழியில் அன்னாரைக் காணவில்லை. மேலும், முஸ்லிம்களின் படை ஹஃபீரில் ஒன்று கூடுகிறது என்று தகவல் கிடைத்தது. எனவே, திரும்பி ஹஃபீருக்குச் சென்றான். ஹுர்முஸ் ஹஃபீர் சென்றடைந்ததும் தனது படையை வரிசைப்படுத்தினான். தனது வலப்புறமும் இடப்புறமும் இரண்டு சகோதரர்கள் குபாஸ் மற்றும் அனூ ஷுஜானை நியமித்தான். மேலும், எவரும் ஓடிவிடக் கூடாது என்பதற்காக ஈரானியர்கள் தங்களைத் தாங்களே சங்கிலிகளால் பிணைத்துக் கொண்டனர். ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களுக்கு ஹுர்முஸ் ஹஃபீருக்கு வந்தடைந்த தகவல் கிடைத்ததும், அன்னார் தமது படையை அழைத்துக் கொண்டு காஸிமாவை நோக்கி திரும்பினார்கள்.

ஹுர்முஸுக்கு இது தெரிந்ததும் உடனடியாக காஸிமாவை நோக்கி புறப்பட்டான். மேலும், அங்கு தங்கினான். இஸ்லாமிய காலாட்படை முன்னேறியவாறு எதிரிகளின் மீது தாக்குதல் தொடுத்தது. இரு புறமும் சண்டை ஆரம்பித்ததும், அல்லாஹ் ஒரு மேகத்துண்டை அனுப்பினான். முஸ்லிம்களின் படைக்குப் பின்னே மழை பெய்தது. இதனால் அவர்களுக்கு ஆற்றல் கிடைத்தது.

ஹுர்முஸ் தனது பாதுகாப்பு படையிடம், "நான் ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களுடன் தனித்து சண்டையிட அழைப்பு விடுக்கிறேன். அத்தருணத்தில் நீங்கள் மறைந்திருந்து திடீரென்று அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடுங்கள்" என்று கூறினான். பிறகு அவன் களத்தில் இறங்கினான். மேலும், அன்னாரை சண்டையிட அழைத்தான். அன்னார் அவனை நோக்கி நடந்து வந்தார்கள். இருவருக்கும் இடையில் சண்டை நடந்தது. அன்னார் ஹுர்முஸை தம் பிடிக்குள் கொண்டு வந்து விட்டார்கள். எனவே அவனது பாதுகாப்பு படை நம்பிக்கை துரோகம் செய்தவாறு அன்னார் மீது தாக்குதல் தொடுத்தது. மேலும், அன்னாரை சுற்றி வளைத்து விட்டது. அவ்வாறிருந்தும் அன்னார் ஹுர்முஸைக் கொன்று விட்டார்கள்.

ஹஸ்ரத் கஃகாஃ பின் அம்ர் அவர்கள் ஈரானியர்களது இந்த ஏமாற்று வேலையைக் கண்ட போது, அதனுடைய பாதுகாப்புப் படை மீது தாக்குதல் தொடுத்தார்கள். மேலும், அவர்களை சுற்றி வளைத்து அவர்களை மீளாத் துயிலில் ஆழ்த்தினார்கள். ஈரானியர்களுக்கு பகிரங்கமான தோல்வி ஏற்பட்டது. மேலும், அவர்கள் ஓடி விட்டார்கள். ஓடியவர்களில் குபாஸ் மற்றும் அனூ ஷுஜானும் இருந்தார்கள். போரின் முடிவில் போர்ச் செல்வங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதில் ஹுர்முஸின் ஒரு லட்சம் திர்ஹம் மதிப்பிலான ரத்தினங்கள் பதிக்கப்பட்ட தொப்பி, ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**பிறகு உப்லா போர் பற்றிய குறிப்பு உள்ளது.** இது 12 ஹிஜ்ரியில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'ஈராக்கில் பாரசீக வளைகுடாவின் ஓர் எல்லை பகுதியான உபுலாவிலிருந்து போரை ஆரம்பியுங்கள்' என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள். இந்தியா மற்றும் சிந்துக்கு ஈராக்கில் இருந்து வரும் பயண குழுக்கள், முதன் முதலில் உபுலாவில் தான் தங்கி வந்தன. இதன் வெற்றியைக் குறித்து இரண்டு அறிவிப்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் இதனை முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது காலத்தில் வெற்றி பெற்றார்கள். ஆனால், பிறகு இது மீண்டும் ஈரானியர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் சென்று விட்டது. மேலும், ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களது

காலத்தில் முஸ்லிம்கள் இதன் மீது முழுவதுமாக ஆதிக்கம் பெற்றார்கள். எவ்வாறு இருப்பினும், உபுலா போரின் விளக்கம் இவ்வாறாகும்:

ஸாத்துஸ் ஸலாஸில் போர் முடிவுற்ற பிறகு, ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஸ்னா அவர்களை, ஈரானியர்களது தோல்வி கண்ட படையை பின் தொடர்ந்து செல்ல அனுப்பினார்கள். அத்துடன் ஹஸ்ரத் முஅக்கல் (ரலி) அவர்களைப் போர் செல்வங்களை ஒன்று திரட்டவும் கைதிகளை சிறை பிடித்து வைக்கவும் உப்லாவுக்கு அனுப்பினார்கள். எனவே முஅக்கல் (ரலி) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, உப்லா சென்றடைந்தார்கள். போர்ச் செல்வங்கள் மற்றும் கைதிகளை ஒன்று திரட்டினார்கள். இரண்டாவது அறிவிப்பின் அடிப்படையில், இந்த வெற்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது காலத்தில் நிகழ்ந்தது.

**பிறகு மதார் போர் ஒன்று உள்ளது.** இந்தப் போர் ஹிஜ்ரி 12 இல் போரிடப்பட்டது. ஹுர்முஸ் ஸாத்துஸ் ஸலாஸில் போரில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு எதிராக இருந்தான். உதவிக்காக எழுதியதனால், மன்னன், காரினுடைய தலைமையில் ஒரு படையை அவனது உதவிக்காக அனுப்பினான். ஆனால், அந்தப் படை அச்சமயம் மதார் என்ற இடத்தை அடைந்திருந்த போது, ஹுர்முஸின் தோல்வி மற்றும் அவன் கொல்லப்பட்டது பற்றிய தகவல் அதற்குக் கிடைத்தது. அத்துடன், ஹுர்முஸின் தோல்வி அடைந்த படை மதாரில் காரினிடம் வந்து சேர்ந்தது. அங்கு அவர்கள் போரின் எண்ணத்தோடு தங்கினார்கள்.

காரின், முன் செல்லும் படைக்கு குபாஸ் மற்றும் அனூ ஷுஜானை நியமித்தான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் காரின் பற்றிய தகவல் கிடைத்ததும் புறப்பட்டு, மதாரில் இந்தப் படையை எதிர்க்க வந்தார்கள். மேலும், தமது படையை வரிசைப்படுத்தினார்கள். இரண்டு படைக்கும் இடையே மிகவும் ஆக்ரோஷமான மோதல் ஏற்பட்டது. காரின் தனித்து சண்டையிட மைதானத்திற்கு வந்தான். மறுபுறம் ஹஸ்ரத் காலித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மஅக்கில் பின் அல் அஃஷா (ரலி) ஆகியோர் முன்னே வந்தனர். இருவரும் அவனை நோக்கி பாய்ந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் மஅக்கில் அவர்கள் அன்னாருக்கு முன்பே காரினை சென்றடைந்து, அவனைக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் அனூ ஷுஜானையும் ஹஸ்ரத் அத்தி (ரலி) அவர்கள் குபாஸையும் கொன்றார்கள். இம்மூன்று தலைவர்கள் கொல்லப்பட்டதும் ஈரானியர்கள் தன்னம்பிக்கை இழந்தனர். மேலும், களத்தை விட்டு விட்டு ஓட ஆரம்பித்தனர். இந்தப் போரில் பாரசீகர்களின் பெரும் எண்ணிக்கை கொல்லப்பட்டது.

**வலஜா போர், கஸ்கருக்கு அருகில் வறண்ட பகுதியில், ஸஃபர் 12 ஹிஜ்ரியில் நடைபெற்றது.** ஈரானிய அரசு ஈரானில் வாழ்கின்ற கிறிஸ்தவர்களின் ஒரு பெரிய கோத்திரமான பக்ர் பின் வாயிலின் தலைவர்களை ஈரானிய அவைக்கு அழைத்தார்கள். மேலும், முஸ்லிம்களுக்கு எதிராக சண்டையிட இணங்கச் செய்து ஒரு படையை வரிசைப்படுத்தினார்கள். மேலும், அதன் தலைமையை ஒரு பிரசித்தி பெற்ற குதிரை வீரரான அந்தர் ஸகரின் கையில் கொடுத்தனர். இந்தப் படை வலஜாவை நோக்கி புறப்பட்டது. ஹைரா மற்றும் கஸ்கரின் எல்லை புற பகுதிகளின் மக்களும் விவசாயிகளும் இந்தப் படையுடன் இணைந்து கொண்டனர்.

பாரசீக படை வலஜாவில் ஒன்று கூடி உள்ளது பற்றிய தகவல் கிடைத்தது. உடனே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அவர்களது ஒன்று கூடலை சிதறடிக்கச் செய்வதற்கும், இவ்வாறு திடீரென்று தாக்குதல் தொடுப்பதனால் எதிரிகள் கவலைக்கு ஆளாகி விடுவர் என்று கருதியும் அவர்கள் மீது மூன்று புறத்திலிருந்து தாக்குதல் தொடுப்பதை உகந்ததாகக் கருதினார்கள். அன்னார் தமது படையை அழைத்துக்

கொண்டு வலஜாவை நோக்கி முன்னேறினார்கள். மேலும், எதிரியின் படை மற்றும் அவனது உதவி படைகளை எதிர்த்து நின்றார்கள். கடுமையான போர் நடைபெற்றது.

அன்னார் படையின் இருபுறமும் போராளிகளை பதுங்கியிருக்குமாறு கூறியிருந்தார்கள். இறுதியில் பதுங்கியிருந்த படைகள் இரு புறத்திலிருந்தும் எதிரிகள் மீது தாக்குதல் தொடுத்தன. ஈரானியர்களின் படைகள் தோல்வியுற்று ஓடிவிட்டன. ஆனால், அன்னார் முன்புறம் இருந்தும், பதுங்கியிருந்த இரு படைகளும் பின்னால் இருந்தும் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் தடுமாறினர். எதுவரை என்றால், எவரும் தன்னுடன் இருப்பவர்கள் கொல்லப்படுவதையும் பொருட்படுத்தவில்லை. எதிரி படையின் தளபதி தோல்வியடைந்து இறுதியில் கொல்லப்பட்டான். விவசாயிகளுடன் ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் தமது நடைமுறைக்கு ஏற்ப நடந்து கொண்டார்கள். அதாவது, அவர்களில் எவரையும் கொல்லவில்லை. போரிட்டவர்களின் பிள்ளைகள் மற்றும் அவர்களது உதவியாளர்களை மட்டும் கைது செய்தார்கள். நாட்டின் பொதுமக்களை ஜிஸ்யா வரி வழங்கவும், மாற்று மதத்தினராய் வாழவும் அழைப்பு விடுத்தார்கள். அதனை அம்மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

**உல்லைஸ் போர் ஸஃபர் மாதம் 12 ஹிஜ்ரியில் நடைபெற்றது.** கடுமையான போர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் பௌதீக காரணிகள் போதுமானதாக இல்லாததைக் கண்டு மிகவும் பணிவுடன் கையேந்தி இவ்வாறு துஆ செய்தார்கள்: **"**அல்லாஹ்வே நீ எனக்கு பகைவர்கள் மீது ஆதிக்கத்தை வழங்குவாய் என்றால், நான் எந்த ஒரு பகைவரையும் உயிருடன் விடமாட்டேன். மேலும், இந்த நதி அவர்களது ரத்தத்தால் சிவந்து விடும்**"**.

இதற்குப் பிறகு அன்னார் போர் தந்திரத்தைக் கையாண்டவாறு படையை வலது மற்றும் இடது புறத்திலிருந்து, ஈரானிய படையின் பின்புறத்தின் மீது தாக்குதல் தொடுக்க கட்டளையிட்டார்கள். இதனால் ஈரானிய படை சிதறுண்டது. அன்னார், **'**எதிரிகளைப் பிடித்து கைது செய்யுங்கள். எதிர்த்து வருபவர்களைத் தவிர வேறு எவரையும் கொல்லாதீர்கள்**'** என்று கட்டளையிட்டார்கள்.

**கைதிகளைக் கொலை செய்து ரத்தத்தை நதியில் சிந்துவது பற்றிய விளக்கம்**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* தபரீயின் வரலாற்று நூல் மற்றும் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்: **'**ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது துஆவில் என்ன உறுதிமொழி எடுத்தார்களோ அதற்கு ஏற்ப ஒரு பகல் மற்றும் ஓர் இரவில் இந்தக் கைதிகளைக் கொலை செய்து, நதியின் நீர் இரத்தத்தால் சிவப்பதற்காக நதியில் இட்டார்கள். மேலும், இதன் காரணத்தினாலேயே இந்த நதி இன்று வரை நஹ்ருத் தம் (ரத்த ஆறு) என்ற பெயரால் பிரசித்தி பெற்றுள்ளது.**'**

இஸ்லாமிய போர்கள், குறிப்பாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது அருளுக்குரிய காலகட்டத்தில் மற்றும் நேர்வழிபெற்ற கிலாஃபத்தின் காலத்தின் போர்களில், இவ்வாறு கைதிகள் கொலை செய்யப்பட்டதாக உண்மையில் காணக் கிடைப்பதில்லை. ஆயினும், இந்தப் போர்களில் லட்சக்கணக்கான ஆயிரக்கணக்கான கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கிடைக்கின்றதுதான். ஆனால், இவர்கள் அனைவரும் போரின் போது கொல்லப்பட்டவர்கள் ஆவர். எனவே இப்படிப்பட்ட சம்பவங்களில் மிகைப்படுத்துதலும் ஓரளவுக்கு இணைந்து விட்டது என்று கூறலாம்.

இதன் அடிப்படையில், இஸ்லாமிய போர்கள் மற்றும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீது இழிவான தாக்குதல் நடத்துபவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அல்லது போர்களில் முஸ்லிம்கள் மீது காட்டு மிராண்டித்தனமான நடைமுறையை மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எவ்வாறாகிலும் அல்லாஹுத்

தஆலாவே நன்கு அறிவான். ஆனால் வெளிப்படையாக இது அவதூறு என்று மட்டுமே தோன்றுகிறது.

**அம்கீஷியா வெற்றி பற்றி எழுதப்பட்டுள்ளது.** அம்கீஷியா ஈராக்கில் உள்ள ஓர் இடமாகும். இதனை அல்லாஹ் தஆலா ஸஃபர் மாதம் 12 ஹிஜ்ரியில், போர் இன்றியே வெற்றி கொள்ளச் செய்தான். ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் உலைஸின் வெற்றியில் இருந்து விடுபட்ட பிறகு, அன்னார் ஆயத்தம் செய்து, அம்கீஷியாவுக்கு வந்தார்கள். ஆனால் அன்னார் வருவதற்கு முன்பாகவே அங்குள்ள குடிமக்கள் விரைவிலேயே அப்பகுதியை விட்டுவிட்டு சவாதுக்குச் சென்று பரவி விட்டார்கள்.

முஸ்லிம்களுக்கு அம்கீஷியாவில் இருந்து எந்த அளவுக்கு போர்ச் செல்வங்கள் கிடைத்தனவென்றால், ஸாத்துஸ் ஸலாஸிலிருந்து தற்போது வரை எந்தப் போரிலும் அந்த அளவு கிடைக்கவில்லை.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், உல்லைஸ் மற்றும் அம்கீஷியாவின் வெற்றிகள் பற்றிய நற்செய்தியின் தகவலை பனூ அஜலின் ஜுந்தல் என்ற பெயருடைய நபர் வாயிலாகக் கொடுத்து அனுப்பினார்கள். அவர் ஒரு வீரமிக்க வழிகாட்டியாக பிரசித்தி பெற்றிருந்தார். அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று உல்லைஸின் வெற்றியின் நற்செய்தி, போர்ச் செல்வத்தின் அளவு, கைதிகளின் எண்ணிக்கை, ஐந்தில் ஒரு பங்கில் கிடைத்த பொருட்கள் மற்றும் சிறந்த முறையில் போர் புரிந்த மக்களைப் பற்றிய குறிப்பு ஆகிய அனைத்தையும் விரிவாகவும், குறிப்பாக ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களது வீர தீரச் செயல்களை மிகவும் அழகான முறையில் எடுத்துக் கூறினார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இவரது வீரம், உறுதியான கருத்து மற்றும் வெற்றியின் செய்தியை எடுத்துக் கூறும் இந்த முறை மிகவும் பிடித்து விட்டது. அன்னார் அவருக்குக் கைதிகளிலிருந்து ஓர் அடிமைப் பெண்ணைக் கொடுக்க கட்டளையிட்டார்கள். அவள் வாயிலாக அவருக்கு சந்ததிகள் பிறந்தன. இதேபோன்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், “இப்போது பெண்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் போன்ற ஒரு மனிதரைப் பெற்றெடுக்கவே முடியாது” என்றும் கூறினார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)